மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) ஆம்.

(இ) அவைபற்றி இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

(உ) ஆம்.

(எ) இக்கோரிக்கை இன்னும் அரசின் பரிசிலனையில் இருந்து வருகிறது.

(முற்பகல் 9-40)

டாக்டர் இரா. சனார்த்தனம் : தலைவர் அவர்களே, பகுதி நேரக் கிராமக் காவலர்கள் தமிழ் நாட்டில் எவ்வளவு பேர் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, 31,506 கிராமக் காவலர்கள் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. ஆ. நல்லசிவன் : தலைவர் அவர்களே, இந்த கிராம நிர்வாக அலுவலர்களின்கீழ் பணியாற்றும் பகுதி நேர கிராம நிர்வாக அலுவலர்களுடைய மாதாந்திர ஊதியம் என்ன? அப்படிப்பட்ட ஊதியத்தின் காரணமாக அரசுக்கு எவ்வளவு செலவு ஏற்படுகிறது? அரசு இதை உடனடியாக உயர்த்துகிற நோக்கம் ஏதாவது இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, கிராமக் காவலர்கள் என்பது கிராமக் காவலர்கள், கிராமப் பணியாளர்கள் மற்றும் பாசனக் காவலர்கள் என்று பெயர். அவர்கள் 31,506 பேர் இருக்கிறார்கள். மாதச் சம்பளம் மிகக் குறைவாகத்தான் இருக்கிறது. மாதச் சம்பளம் ரூ. 140 தான். அந்த 140 ரூபாய் மிகக் குறைவு என்று இந்த அரசு உணர்ந்திருக்கிறது. அதை இந்த அரசு பரிசிலித்து விரைவிலே அதற்கு வேண்டிய உத்தரவைப் பிறப்பிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Incentive Increments for Secretarial Assistants.

*53. *Q.*—Dr. T. R. JANARTHANAM (on behalf of Thiru **P. R. Thomas**): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that erstwhile Secretarial Assistants are eligible for incentive increments for acquiring M.A. or M.Ed. qualifications ; and

(*b*) if so, the reasons for not extending this privilege to the erstwhile bifurcated staff in Agriculture Section ?

1984 மார்ச் 6]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (இ) முன்னர் செக்ரடேரியல் பாட ஆசிரியர்களுக்கு எம்.ஏ. பட்டம் பெற்றால் மட்டும் அதற்கு இரண்டு ஊக்க ஊதிய உயர்வு தரப்பட்டு வந்தது. எம்.எட். பட்டத்திற்கு அவர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வு தரப்பட்டு வரவில்லை. தற்பொழுது 5—9—1983-க்குப் பின் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறையிலிருந்து வெளியான அனைத்துத் துறைகளுக்கும் பொதுவான அரசாணை (நிலை) எண் 843, நாள் 5—9—1983-ன்படி ஊக்க ஊதிய உயர்வுத் திட்டங்கள் அனைத்திற்கும் பதிலாக ஒட்டுமொத்தத் தொகைகளே தரப்பட வேண்டுமென்ற நிலை ஏற்பட்டுள்ளது. அதற்கேற்ப பள்ளி ஆசிரியர்களில் பல்வேறு நிலையினரில் உயர்படிப்புகளுக்குத் தரக்கூடிய ஒட்டுமொத்தத் தொகையை நிர்ணயித்து அரசாணை விரைவில் கல்வித் துறை வெளியிடவிருக்கிறது. செக்ரடேரியல் பாட ஆசிரியர்களின் பல்வேறு உயர் படிப்புகளுக்கும் உரிய தொகை நிர்ணயிக்கப்படும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கேள்வி போட அவ்வளவுக்கும் டாக்டர் சனார்த்தனம்தான் என்பதை நான் முடிவு கட்டி விட்டேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : தலைவர் அவர்களே, யாரும் இல்லாததால் . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதனாலே எல்லாவற்றுக்கும் கேள்வி கேட்க வேண்டிய அவசியமில்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, வேளாண்மைப் பிரிவிலிருந்த அவர்களுக்கும் சலுகை வழங்கப்பட்டிருக்கிறதா என்பதற்கு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, செக்ரடேரியல் பாட ஆசிரியர் மேல்நிலைப் பள்ளி வகுப்பு அமுலாவதற்கு முன்பு உயர்நிலைப் பள்ளிகளில் கற்றுத் தரப்பட்டுவந்த இரு முனைப் பாடங்களில் ஒன்றாகிய செக்ரடேரியல் பாடத்தைக் கற்றுத் தந்தனர். அவர்களுக்குத்தான் இந்தச் சலுகை என்று சொல்லப்பட்டது. அந்த இருமுனைப் பாடங்களிலே இருந்து வந்த தோட்ட ஆசிரியர்களுக்கும் அது பொருந்தும்.

செல்வி ஆ. லீலாவதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அனைத்து ஆசிரியர்களுக்குமே ஒட்டுமொத்தமாக ஒரு தொகையைக் கொடுக்க 5—1—1983-லிருந்து நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்று கூறுகிறார்கள்.

ஆனால் அனைத்து ஆசிரியர்களும் மீண்டும் தங்களுக்கு ஊக்க ஊதியம் கொடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். அது பரிசீலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, பல்வேறு ஆசிரியர் சங்கங்களும் தங்களுக்கு மட்டும் தந்து வந்த ஊக்க ஊதிய உயர்வை, இந்தப் பொதுவான உத்தரவுக்குப் பிறகும் தொடர்ந்து தரவேண்டுமென்று கேட்டு வருகிறார்கள். ஆக அவர்களுடைய கோரிக்கைகளை அரசு பரிசிலனையில் எடுத்துக்கொள்ளும்.

மத்திய செகண்டரி கல்விக் கழகத்துடன் இணைந்த பள்ளிகள்

* 54 வினா.—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (திரு. ம. சங்காலிங்கம் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மத்திய செகண்டரி கல்விக் கழகத்தின் (Central Board of Secondary Education) அனுமதியோடு, தமிழ் நாட்டில் நடைபெறும் உயர்நிலைப் பள்ளிகளைக் கண்காணிக்க, மாநில அரசு ஏற்பாடு ஏதேனும் செய்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

(உ) அப்பள்ளிகளில் நடைபெறும் தவறுகளை மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு வரும் உத்தேசம் ஏதும் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(எ) ஆம் எனில், அது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(உ) இல்லை.

(எ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம் : தலைவர் அவர்களே, செண்ட்ரல் போர்ட் ஆஃப் செகண்டரி எஜுகேஷன் நிர்வாகத்தின்கீழ் நடைபெறும் கல்வி நிறுவனங்களின் கல்விக் கொள்கைகளும் தமிழ் நாட்டில் உள்ள கல்விக் கொள்கைகளுக்கு இணையாக இருக்கின்றனவா? அப்படி இணையாக இருக்க வேண்டுமென்று வலியுறுத்த நமக்கு வாய்ப்பிருக்கின்றதா?